# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.

## CC. No. 1489/2022 PW . 1

| | |
|---|---|
| Name : அறிவுசெல்வி | Husband's Name : குமார் |
| Village: | Taluk : |
| Age : | Occupation : |
| Caste : | Religion : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.03.2024

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

---

முதல் விசாரணை:

நான் கடந்த 9 ஆண்டுகளாக சிவகங்கை மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்களில் வழக்கறிஞராக பணி செய்து வருகிறேன். என்னுடைய தகப்பனார் திருநாவுக்கரசு ஒரு சமூகநல ஆர்வலர். அவர் சமுதாயத்தில் நடக்கும் அநீதிகளுக்கு எதிராக முடிந்தவரை குரல் கொடுத்துவந்தார். கல்லல் ஆற்றுபடுகையில் மணல் திருட்டு தனமாக அள்ளுவதற்கு எதிராக உயர் அதிகாரிகளுக்கு மனு கொடுத்து வந்தார். கல்லல் காவல்நிலையத்தில் சமூக விரோதிகளுக்கு ஆதரவாக செயல்படும் காவலர்கள் மீதும் உயர் அதிகாரிகள் மீதும் மனு கொடுத்து வந்தார். கல்லல் காவல்நிலையத்தில் ஆய்வாளராக இருந்த சாதுரமேஷ் என்பவர் கடந்த 2016-2019 வருடம் வரை பணியாற்றினார். சமூக விரோதிகளுக்கு ஆதரவாக சாதுரமேஷ் என்பவர் செயல்பட்டுவந்தார். இதை எதிர்த்து எனது தகப்பனார் திருநாவுக்கரசு குடியரசு தலைவர், புதுடில்லி, முதலமைச்சர் தனிப்பிரிவு மற்றும் மாவட்ட ஆட்சியாளர் மற்றும் காவல் உயர் அதிகாரிகளுக்கு புகார் கொடுத்திருந்தார். கடந்த 08.02.2018 அன்று கல்லல் காவல்நிலையத்தில் எனது மூத்த வழக்கறிஞர் ஆலோசனையின்படி கட்சிக்காரர்களுக்காக நான் காவல்நிலையம் சென்றிருந்தேன். அங்கு ஆய்வாளர்சாதுரமேஷ் பொறுப்பில் இருந்தார். அவர் அப்போது காவல்நிலையம் சென்ற என்னைப்பார்த்து.”நீ தான் திருநாவுக்கரசு மகளா உங்க அப்பன ஒழுங்கா இருக்க சொல்லு இல்லைனா நான் என்ன பண்ணுவேனு எனக்கு தெரியாது ”

என்று மிரட்டினார். அதற்கு நான் அவரிடம் நான் கட்சிக்காரருக்காக காவல்நிலையம் வந்துள்ளேன் என்றும் எனது அப்பாவை பற்றி பேசவேண்டாம் என கூறிவிட்டு வெளியே வந்துவிட்டேன். அதன்பிறகு 01.03.2019 அன்று எனது தந்தை பெயருக்கு வீட்டிற்கு சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பு அலுவலகத்திலிருந்து ஒரு குறிப்பாணை வந்தது. அதில் எனது தந்தை குடும்ப பிரச்சனையால் ஏற்பட்ட மனஉளைச்சல், மனநலம் பாதிப்பு காரணமாக உயர்அதிகாரிகளுக்கு பொய்யாக புகார் கொடுத்து வருவதால் அவரது புகாரின் பேரில் எந்தவித மேல்நடவடிக்கைக்கும் அவசியம் இல்லை என நான் ஒப்புதல் தெரிவித்ததாக குறிப்பிட்டிருந்தது. நான் அவ்வாறு ஒப்புதல் தெரிவித்து எழுதி கொடுத்ததாக குறிப்பிடும் ஆவணத்தின் நகலை வழங்க வேண்டி சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் 26.04.2019ல் ஒரு மனு கொடுத்தேன். அவ்வாறு நான் எழுதிகொடுத்ததாக குறிப்பிடும் ஆவணத்தின் நகல் எனக்கு 22.01.2020ல் அனுப்பப்பட்டது. அந்த ஆவணத்தில் இடம்பெற்ற வாசகங்களில் உள்ளது என்னுடைய கையெழுத்து இல்லை. அவ்வாறு எந்த ஆவணமும் கல்லல் காவல்நிலைய ஆய்வாளர் சாதுரமேஷ் என்பவருக்கு நான் எழுதி கொடுத்ததில்லை. அதில் நான் எந்த கையெழுத்தும் செய்யவில்லை. அந்த ஆவணத்தை பார்த்தவுடன் எனக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. நான் எழுதிகொடுக்காத ஒரு கடிதத்தை ஆய்வாளர் தயாரித்து உள்ளதாக எண்ணுகிறேன். இது சம்பந்தமாக எனது தாயார் வசந்தியிடம் கேட்டபோது அவர் என்னிடம் தானும் ஒரு பிரச்சனைக்காக கல்லல் காவல்நிலைய ஆய்வாளர் சாதுரமேஷ்-டம் புகார் கொடுக்க சென்றபோது எனது தாயாரிடமும் சாதுரமேஷ் உனது கணவருக்கு மனு அனுப்புவதுதான் வேலையா என்றும் அவர் அனுப்பிய மனுவின் மீது மேல்நடவடிக்கை தேவையில்லை என எழுதி கொடுக்குமாறு வற்புறுத்தியதாகவும் சொன்னார். நான் எழுதிகொடுத்ததாக சொல்லும் கடிதத்தில் எந்த தேதியில் எங்கு வைத்து எழுதி கொடுத்தேன் என்ற விபரமும் இல்லை. அதில் எனது கையெழுத்தை மோசடியாக சாதுரமேஷ் போட்டுள்ளார். அதில் ஆய்வாளர் முத்திரையுடன் ரமேஷ் என்று



கையெழுத்து இருந்தது. உடனே நான் சாதுரமேஷ் மீது நடவடிக்கை எடுக்குமாறு

சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு கடந்த 22.03.2020 அன்று நேரடியாக போய் ஒரு மனு கொடுத்தேன். அந்த மனுவிற்கு எண் 627-2021 என்ற எண் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் எனது தந்தை கல்லல் மணிமுத்தாறு ஆற்றுபடுகையில் கடந்த 12.08.2019ல் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டிருந்தார். அது சம்பந்தமான நான் உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்ததாலும், கொலைக்கான காரணம் குறித்து வழக்கு நடத்தி வந்ததாலும் நான் கர்ப்பமாகி இருந்ததாலும் இந்த வழக்கை தாக்கல் செய்ய சற்று காலதாமதம் ஏற்பட்டது. இது சம்பந்தமாக மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் இல்லாததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இது சம்பந்தமாக டி.ஜிபி. அலுவலகத்திற்கும், காவல்துறை தென்மண்டல ஐஜிக்கும் முதல் அமைச்சர் தனிபிரிவிற்கும் 21.04.2021ல் மனு அனுப்பியிருந்தேன். அதற்கும் எந்த நடவடிக்கையும் எடுக்காததாலும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது கையெழுத்தை மோசடியாக போட்டு அவரது அரசு பதவியை தவறாக பயன்படுத்திய சாதுரமேஷ் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். எனது தந்தை கொடுத்த புகாரை முறையாக விசாரணை செய்திருந்தால் எனது தந்தை இறந்திருக்க வாய்ப்பில்லை. **01.03.2019 தேதியிட்டு சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து எனது தந்தைக்கு வந்த குறிப்பாணையின் அசல் அதசாஆ. 1. 26.04.2019 தேதியிட்டு சிவகங்கை மாவட்ட காவல் அலுவலக பொது தகவல் அலுவலருக்கு தகவல் உரிமை சட்டத்தின் கீழ் நான் அனுப்பிய மனுவின் கைநகல் அதசாஆ. 2. நான் எழுதிகொடுத்ததாக எனது கையெழுத்தை மோசடியாக எழுதி உருவாக்கிய ஆவணத்தின் ஒளிநகல் அதசாஆ. 3. (ஒளிநகல் என்பதால் எதிரி தரப்பில்ஆட்சேபனை தொவிக்கப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது). எனது தந்தையின் இறப்பு சான்றிதழ் அதசாஆ. 4. 21.05.2021 தேதியில் நான் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு கொடுத்த புகார் நகல் அதசாஆ. 5. அதே தேதியிட்டு முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு அனுப்பிய மனுவின் நகல் அதசாஆ. 6. அதே தேதியிட்ட டிஜி அவர்களுக்கு அனுப்பிய அறிவிப்பு நகல் அதசாஆ. 7. அதே தேதியிட்ட ஐஜிக்கு அனுப்பிய அறிவிப்பு நகல் அதசாஆ. 8. அஞ்சல் ஒப்புகை அட்டைகள் அதசாஆ. 9 முதல் 12வரை.**



**24.03.2021ல் நான் நேரடியாக மாவட்ட கண்காணிப்பாளருக்கு அளித்த புகார் மற்றும் ரசீது அதசாஆ. 13. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் 22.12.2023 தேதியிட்டு எனது**

**தந்தை தாக்கல் செய்த நீதிபேராணையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் ஒளிநகல் அதசாஆ.**

**14.** ( எதிரி தரப்பில் மேற்கண்ட ஆவணத்தின் இந்த எதிரி தரப்பினா் இல்லை என ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது)

குறுக்கு விசாரணை: மறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.